செ.வெ.எண்: 212 நாள்: 18.03.2008

<u>செய்திக் வெளியீடு.</u>

சென்னையைச் சேர்ந்த உலக கேரம் விளையாட்டு வீராங்களை
செல்வி இ. இளவழகி அவர்களுக்கு அவரது சாதனைகளைப் பாராட்டி
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூ.10 லட்சம் ஊக்க பரிசு வழங்கினார்.

-------

செல்வி இ.இளவழகி, கேரம் விளையாட்டில் 1997–ஆம் ஆண்டிலிருந்து சப்–ஜுனியர் மாநில சேம்பியன். இவர் இதுவரை 37 பதக்கங்களையும், கோப்பைகளையும் வென்றுள்ளார். அமெரிக்கா, இலங்கை மற்றும் மாலத்தீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகப் போட்டிகளில் பங்கேற்று சேம்பியன் பதக்கங்களை பெற்றுள்ளார். மேலும் சார்க் சாம்பியன் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களையும், ஆசிய சாம்பியன் போட்டியில் 3 தங்கப் பதக்கங்களையும் வென்றுள்ளார். தமிழ்நாட்டில் பெண் கேரம் சேம்பியன்களில் முதல் ரேங்கிலும் மற்றும் இந்திய பெண் ரேங்கில் மூன்றாவதாகவும் உள்ளார்.

சமீபத்தில், 13.2.2008 முதல் 17.2.2008 முடிய பிரான்ஸ்சில் உலக கேரம் சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டியில் உலக சாம்பியன்ஷிப் பட்டம் வென்று தமிழகத்திற்கு புகழ் சேர்த்துள்ளார். இவருக்கு மேற்படிப் போட்டியில் கலந்துகொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ரூ.30,000/– விமானப் பயணக்கட்டணம் வழங்கியுள்ளது.

தமிழக அரசு உலக, பன்னாட்டு மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனை புரியும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி கௌரவித்து வருகின்றது. இதனடிப்படையில் செல்வி இ.இளவழகி, உலக அளவு கேரம் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளதால், இவரது சாதனைகளைப் பாராட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 18. 03. 2008அன்று அவரது அலுவலகத்தில் ரூ.10 லட்சத்திற்கான காசோலையினை செல்வி இளவழகிக்கு வழங்கினார்.

செல்வி இ. இளவழகி, உலக கேரம் சாம்பியன் அவர்களின் சாதனை விபரங்கள்.

- தரப்பட்டியல்.
  - சென்னை முதல் இடம்
  - தமிழ்நாடு மாநிலம் முதல் இடம்
  - இந்திய அளவில் 3ம் இடம்
  - SAARC முதல் இடம்
  - ஆசிய அளவில் முதல் இடம்.
- சாதனைகள்
  - 1998 முதல் ஜுனியர் மாநில சேம்பியன்
  - 2001ம் ஆண்டு முதல் ஜுனியர் / சீனியர் தேசிய சேம்பியன்
    - இந்தியா– ஸ்ரீலங்கா கேரம் தேர்வு போட்டி–2004. ஒற்றயர் மற்றும் குழுப் போட்டி முதல் இடம்.
    - 12வது பெரரேசன் கப் கோரம் விளையாட்டு–2004. ஒற்றையர் மற்றும் இரட்டையர் முதல் இடம்.
    - யு.எஸ்.ஏ ஒப்பன் போட்டி–2004, அட்லாண்டிக் சிட்டி–தனிநபர் மூன்றாம் இடம்.
    - 13ஆவது பெடரேசன் கோப்பை போட்டி–2004–தனி நபர் மூன்றாம் இடம்.
    - 34ஆவது ஜுனியர் தேசிய இளைஞர் போட்டி–2004–தனிநபர் முதல் இடம்.
    - 9வது SAARC சேம்பியன்சிப் போட்டி–மாலத்தீவு–2005 மகளிர்–ஒற்றையர்., மகளிர்–இரட்டையர்., மகளிர் குழுப் போட்டி முதல் இடம்.
    - ஆசியப் சேம்பியன்சிப் போட்டி– மாலத்தீவு–2005 மகளிர்–ஒற்றையர்., மகளிர்–இரட்டையர்., மகளிர் குழுப் போட்டி முதல் இடம்.
    - உலக கேரம் சேம்பியன்சிப்–2006. முதல் இடம்.
    - 2008–தேசிய சேம்பியன்சிப்–முதல் இடம்.
    - உலக கேரம் சேம்பியன்சிப்– 13.2.2008 முதல் 17.2.2008 முடிய பிரான்ஸ்சில் உலக கேரம் சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டி.

2/2

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9